Deposition of Witness

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE ATHOOR

**S.T.C.No.356/2022**

**Deposition of PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாகராஜன் | ஜாதி | : |
| த/பெ | : வெள்ளையக்கவுண்டர் | தொழில் | : விவசாயம் |
| கிராமம் | : கெண்டிச்சம்பட்டி | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : 61/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.03.2023.

(Accused Present)

முதல் விசாரணை

நான் கெண்டிச்சம்பட்டியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 10.04.2021 அன்று காலை சுமார் 09.00மணியளவில் நான், சிவமுருகன், ராமு ஆகியோர் கெண்டிச்சம்பட்டியில் இருந்து புதுக்கோடாங்கிபட்டி ரோட்டில் டிராக்டரில் சென்று கொண்டிருந்தோம் அந்த டிராக்டரை சிவமுருகன் என்பவர் ஓட்டிவந்தார்.புதுகோடாங்கிபட்டி திருப்பத்தில் திரும்பி சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த பஸ் ரொம்ப வேகமாக வந்து எங்களது டிராக்டரில் மோதியது. மோதியதில் எனக்கு இடது நெற்றி, வலது காலின் உள்பக்கம், முதுகு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. ராமுவிற்கு உள்காயம் அதிகமாக இருந்தததது. பின்பகுதியில் காயம் ஏற்பட்டது.சிவமுருகனுக்கு முழங்காலிலும் இடுப்பிலும் காயம் ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தின் ஓட்டுநர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி இருக்கும் எதிரி தான். விபத்து ஏற்பட்டவுடன் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்து சென்றார்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போதும் போலீசார் விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

P JAISANKAR — Digitally signed by P JAISANKAR

District Munsif Cum Judicial Magistrate,
Athoor